மற்றும் சீர்காழி நகராட்சிப் பகுதிகளில் வருவாய்த் துறையினரால் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. வனச் சரக அலுவலகங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து ஆணை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் ஒரு வனச் சரக அலுவலகம் கட்டுவதற்கு ரூ.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. நில ஒதுக்கீடு ஆணை கிடைக்கப்பெற்றவுடன் வனச் சரக அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உடனடி நடவடிக்கை எடுத்து, கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 3–9–2007 ஆம் தேதியன்று தனியார் நிலங்களில் இருக்கக்கூடிய மா, பலா, தென்னை, பனை, சவுக்கு போன்ற 36 வகையான மரங்களை வெட்டிக் கொண்டு செல்வதற்கு இருந்த தடையை நீக்கி அரசுக்கு அதனால் வருகின்ற வருமானத்தில் இழப்பு ஏற்படுத்தியிருக்கின்றார்கள். எனவே, Timber Transport Rules–ஐ மீண்டும் அமல்படுத்தி, தனியார் நிலங்களில் வெட்டப்படுகின்ற . . (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த தினத்தின்போது 64. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வினா வன அலுவலகக் கட்டடம் கட்டுவது சம்பந்தமானது. நீங்கள் இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

104—

கான்கிரீட் கட்டடம்

***8464—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 17]

(அ) சங்ககிரி தொகுதி, நாகிசெட்டிப்பட்டி மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கான்கிரீட் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதியில் செயல்பட்டுவரும் எஸ்.எம்.டி.626, நாகிசெட்டிப்பட்டி மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 17–6–1992 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு தற்போது நாள் ஒன்றுக்கு சரியாக 110 லிட்டர் பால் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. தற்போது, இந்தச் சங்கம் ரூ.49,433/– இலாபம் ஈட்டியுள்ளது. இந்தத் தொகையைக் கொண்டு சங்க உறுப்பினர்களுக்குப் பால் பணத்தை உடனுக்குடன் காலதாமதமின்றி வழங்கி வருகிறது. மேற்படி சங்கத்திற்கு 5 சென்ட் நிலம் சொந்தமாக உள்ளது. இந்த நேரத்தில், சங்க உறுப்பினர்களால் வழங்கப்பட்ட நன்கொடையின்மூலம் 240 சதுர அடியில் சிமென்ட் அட்டை கூரை போட்ட கட்டடம் கட்டப்பட்டு தற்போது இயங்கிவருகிறது. இந்தச் சங்கத்திற்குக் கான்கிரீட் கட்டடம் கட்ட ரூ.4,25,000/– செலவாகும். இச்சங்கத்திற்குக் கட்டட நிதியாக ரூ.15,150/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்தில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் கான்கிரீட் கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பு இல்லை. மேலும், இதுபோன்ற பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் கட்டடம் கட்ட நிதி உதவி செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தில் வழிவகை இல்லை. இருப்பினும், இதுபோன்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், இச்சங்கங்கள் தங்கள் நிதி ஆதாரத்தினை வலுவாக்கி கான்கிரீட்

கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளும். மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் இந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொள்ளலாம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தற்போது தமிழகத்தில் எத்தனை மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன? தற்போது அம்மா அவர்களின் அரசால் வழங்கப்படும் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. அதனால், இதனைக் கருத்தில் கொண்டு அதிக அளவில் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 1,491 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களால் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக அவர்களுக்குத் தேவையான கறவை மாடுகளை வாங்க வங்கிகள்மூலம் கடன் உதவி பெற்றுத் தரப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கறவை மாடு வழங்குவதன் மூலமாகவும், வெண்மைப் புரட்சி ஏற்படுத்துவதன் மூலமாகவும் அதிகமான மகளிர் பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2012 ஏப்ரல் 17]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வையகத்தில் வாழ்கின்ற மனிதர்களுக்கெல்லாம் இதயம் இருக்கின்றது என்பதை நாம் யாவரும் அறிவோம். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் இருப்பதோ இரக்கமுள்ள இதயம். அதனால் 'இதய தெய்வமே, அம்மா' என்று இவ்வையகம் அழைக்கின்றது. இவ்வையகம் போற்றி வணங்குகின்ற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சாத்தூர் ஒன்றியம், முத்தாலநாயக்கன்பட்டி, கீழவெட்டன்பட்டி, வெம்பக்கோட்டை ஒன்றியம், சிவனாண்டிபட்டி, திருவேங்கடபுரம் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அந்தச் சங்கங்களுடைய சொந்தக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமானது அவர்களுடைய சொந்த நிதியிலிருந்து, அதாவது அவர்கள் அங்கே உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பாலினுடைய உற்பத்தியிலேயிருந்து வரக்கூடிய இலாபத்தைக் கொண்டு அவர்களுடைய சங்கத்தின் மூலமாக சொந்தக் கட்டடம் கட்டிக்கொள்ளலாம். ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சொன்னதுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் கட்டிக் கொடுக்கலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.